**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.69/2024 - PW-1**

| | |
|---|---|
| Name | திரு. கோவிந்தராஜ் |
| Husband/Father Name | சின்னகுழந்தை |
| Village /Area | அவினாசி கண்டிகை |
| Taluk | அரக்கோணம் |
| Occupation | விவசாயம் |
| Age | 60 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 03.07.2025.

**(எதிரிகள் 1 முதல் 3 வரை ஆஜர்)**

**முதல் விசாரணை :**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். 22.10.2021 அன்று எனது மகன் அருண் என்பவர் காணவில்லை என இரவு 10.00 மணிக்கு தேடிக்கொண்டிருந்தேன். அவினாசி கண்டிகை பச்சையம்மன் கோயில் அருகே சென்று பார்த்த போது எனது மகன் அருண் கீழே கவிழந்த நிலையில் விழுந்திருந்தார். அவரை புரட்டி பார்த்த போது அவரது காது, தலையில் இரத்த காயம் ஏற்ப்பட்டிருந்தது. அவர் இறந்து கிடந்தார். அவரை அங்கிருந்து கட்டிலில் தூக்கி வந்து அவர் இறந்து விட்டு இருந்ததால் அவருக்கு இறுதி சடங்கு செய்து எங்கள் குல வழக்கம் படி 23.10.2021 அன்று புதைத்து விட்டோம். 24.10.2021 அன்று எங்களுக்கு கிடைத்த தகவின் படி எங்கள் ஊரை சேர்ந்த சந்தோஷ், தரணி, ஜித்து, சொத்த மிளகாய் (எ) சிவலிங்கம், இராமாபுரத்தை சேர்ந்த மாயாண்டி ஆகிய நபர்களால் என் மகனுக்கு இறப்பு ஏற்பட்டது என்று சந்தேகப்பட்டு காவல் நிலையத்தில் புகார்

கொடுத்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனு என்னால் கொடுக்கபட்டது தான் அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் அது அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதில் உள்ள அதன் பிறகு எனது 2வது மகன் அருள் என்பவருக்கு அன்றைய தினமே தகவல் கொடுத்தோம் இது குறித்து எனது மகன் அருள் என்பவர் சந்தோஷ் ஐ கைபேசியில் தொடர்பு கொண்டு பேசிய போது தரணி என்பவரின் போனுக்கு போன் செய்து தரணியின் போனில் பதிவு செய்யும் வசதி இல்லாததால் தரணி என்பவர் செல்போனில் சந்தோஷ் பேசுவதை கைப்பேசியின் ஸ்பீக்கர் ஆன் செய்து அருகில் இருந்த அரவிந்த் என்பவரின் கைபேசியில் பதிவு செய்தார். அந்த பதிவு செய்த உரையாடலை நான் கேட்டேன். அதை எனக்கு அரவிந்த் என்பவர் கைப்பேசி உரையாடலை போட்டு காண்பித்தார். அதை கேட்டேன். அந்த உரையாடலில் ஏற்கனவே எனது மகனுக்கும் எதிரிகளுக்கும் முன்விரோதம் இருந்ததாகவும் எனது மகன் அருண் என்பவர் சந்தோஷ் என்பவரை சிமெண்ட் மூட்டையை தூக்க சொன்னதின் பேரில் அவர் மறுத்ததால் சந்தோஷ் ஐ எனது மகன் தாக்கியதாகவும் அதனால் சந்தோஷ் என்றைக்காக இருந்தாலும் உன்னை சாகடிக்காமல் விடமாட்டோம் என்று கூறியதாகவும், அனைவரும் சேர்ந்து எனது மகனை தாக்கி எனது மகனை சுமார் 50 அடி தொலைவில் இருந்த கைப்பம்பு அருகில் சந்தோஷ் என்பவர் தலையில் அடித்ததாகவும் அதன் பிறகு தரணி என்பவர் அவன் இன்னுமா சாகவில்லை கோத்தா அவனை சாகடி டா என்று கூறியதன் பேரில் எனது மகனை இழுத்து வந்து பச்சையம்மன் கோயில் அருகே பொங்கல் வைக்க பயன்படும் காணிக்கல்லை எடுத்து இதோடு ஒழிந்து போடா தெவிடியா பைய்யா என்று கூறி தலையில் போட்டதாகவும் தெரிந்துகொண்டேன்.அந்த

காணிக்கல் தான் என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள காணிக்கல் ஆகும். அந்த புகைப்படம் அது சா.பொ.1 ஆகும். மேலும் புகைப்படத்தில் உள்ள கைப்பேசி தான் சந்தோஷ் என்பவர் பேசியதை பதிவு செய்த அரவிந்த் என்பவரின் கைப்பேசியாகும். அது சா.பொ.2 ஆகும். மேலும் அந்த கல் இங்கிருந்தால் மாட்டி கொள்வோம் என்று அவர்களின் T.V.S வண்டியில் எடுத்து சென்றுவிட்டதாக கூறியதை தெரிந்துகொண்டேன். நான் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை:** இல்லை.

ஒம்/– திருமதி. கே.எஸ்.ஜெயமங்களம்,
இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
அரக்கோணம்.